

වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව

வருடாந்திர செயல்திறன் அறிக்கை

Annual Performance Report

2022

ජාතික ප්‍රජා ජල සැපයුම් දෙපාර්තමේන්තුව

தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம்

Deprtment of National Community Water Supply

ජලසම්පාදන හා වතු යටිතල පහසුකම් සංවර්ධන අමාත්‍යාංශය

நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு

Ministry of Water Supply and Estate Infrastructure Development

2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களம்

செலவுத் தலைப்பு இல. 332

உள்ளடக்கம்

அத்தியாயம் 01 – நிறுவனத் தோற்றப்பாடு / செயற்படுத்தல் பற்றிய சுருக்கம்

அத்தியாயம் 02 – முன்னேற்றம் மற்றும் தொலைநோக்கு

அத்தியாயம் 03 – ஆண்டிற்குரிய முழுமொத்த நிதிச் செயலாற்றுகை

அத்தியாயம் 04 – செயலாற்றுகைச் சுட்டி

அத்தியாயம் 05 – நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை (SDG) நிறைவேற்றிக்கொள்ளல் பற்றிய செயலாற்றுகை

அத்தியாயம் 06 – மனித வள தோற்றப்பாடு

அத்தியாயம் 07 - இணங்கியொழுகல் பற்றிய அறிக்கை

01 அத்தியாயம்

நிறுவனத் தோற்றப்பாடு / செயற்படுத்தல் பற்றிய சுருக்கம்

1.1 அறிமுகம்

சமூகத்திற்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதை நோக்கமாகக் கொண்டு, சுமார் நான்கு தசாப்தங்களாக பல்வேறு திட்டங்களின் கீழ் அமுலாக்கப்பட்ட சமூக நீர் கருத்திட்டங்களின் நிர்வாக முகாமைத்துவ மற்றும் பல்வேறு சிக்கல்கள் காரணமாக, அந்த திட்டங்களின் நிலையான இருப்பு சவாலுக்கு உள்ளாகிய போது, 2014 செப்டம்பர் 19 ஆம் திகதி தொடக்கம் அமுலாகின்ற விதத்தில் சமூக நீர் கருத்திட்டங்களை ஒழுங்குபடுத்தும் நோக்கத்துடன் தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம் நிறுவப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, DANIDA, FINNIDA போன்ற சர்வதேச அமைப்புகளின் பூரண ஆதரவுடனும் நிதிப் பங்களிப்புடனும் இலங்கைக் குடியரசுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின் பிரகாரம் நாடு முழுவதும் இவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்டு சமூகத்திற்குக் கையளிக்கப்பட்ட சமூக நீர்த் திட்டங்களின் எண்ணிக்கை 5000 ஐ நெருங்கிக் காணப்பட்டது.

பல்வேறு பிரச்சனைகளால் இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களில், கிட்டத்தட்ட 500 சமுதாய குடிநீர் கருத்திட்டங்கள் 2010 ஆம் தசாப்தமளவில் செயல்படாமல் போகும் ஆபத்துக்கு உள்ளாகியது. இதை நன்கு புரிந்து கொண்டு, அப்போதைய அரசாங்கம் அந்த நிலைமையைத் தடுத்து, சமூக நீர் கருத்திட்டங்களின் நிலைபேறான த்தன்மையை உறுதிப்படுத்த தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களம் தாபிக்கப்பட்டது.

2014ஆம் ஆண்டின் இறுதியில் இத்திணைக்களம் நிறுவப்பட்ட போதிலும், திணைக்களத்திற்குத் தேவையான அதிகாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகளை அங்கீகரித்தல், பணியாளர்களை நியமித்தல், தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களை நிறுவுதல் மிக மந்தகதியில் நடைபெறுதல் போன்ற காரணங்களாலும், பொதுத் திறைசேரியிலிருந்து இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டு தொகையும் வருடாந்தம் ரூபா 100 மில்லியன் தொகைக்கும் குறைவாக இருந்தமையாலும் அதன் பணியை முன்னெடுத்துச் செல்வதற்கு பலமான தடையாக இருந்தது.

2019 ஆம் ஆண்டளவில் இந்தச் சவால்களை வெற்றிகொண்டு, ஏற்கனவே உள்ள குடிநீர்த் திட்டங்கள் மற்றும் சமூக மைய அமைப்புகளின் ஒழுங்குமுறையாக்கலைத் தாண்டிச் சென்று, புதிய நீர் கருத்திட்டங்களைத் ஆரம்பித்து, கிராமப்புற சமூகத்தினருக்கான தனித்துவமான சேவையையும் கடமைப் பொறுப்பையும் நிறைவேற்றும் திக்கைளமாக மாற்றுவதற்காக அதன் கடமைப்பொறுப்பு மேலும் விஸ்தரிக்கப்பட்டது. ”பிரஜா ஜல அபிமானி” என்ற பெயரில் ஒரு நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகப்படுத்தி, அதன் மூலம் பல புதிய கிராமங்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்குதல் மற்றும் தொடர்ச்சியாக அந்த நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்துச் செல்லுதல் இங்கு சிறப்பாகக் குறிப்பிட வேண்டும்.

வருடாந்தம் ரூபா 100 மில்லியனுக்கும் குறைவான நிதி ஏற்பாட்டின் கீழ் 5 வருடங்களுக்கும் மேலாக மிகவும் மெதுவாக இயங்கி வந்த இத்திணைக்களம் மேலே குறிப்பிட்ட சவால்களை வெற்றிகொண்டதன் காரணமாக 2019 ஆம் ஆண்டு முதல் இலங்கை அரசாங்கத்தின் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தில் இருந்து ரூபா 1500 மில்லியனுக்கும் அதிகமான நிதி தொடர்ச்சியாக ஒதுக்கி வரப்படுகின்றது. இவ்வாறாக, திணைக்களத்தின் பங்களிப்பை விரிவுபடுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இவ்வேளையில், குறிப்பாக 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளை ஒட்டுமொத்த உலகப் பொருளாதாரமும் பெரும் நெருக்கடியைச் சந்தித்த ஆண்டாகக் குறிப்பிட வேண்டும். கொரோனா பேரழிவை ஓரளவு கட்டுப்படுத்த முடிந்தாலும், அதனால் ஏற்பட்ட பொருளாதார பேரழிவுகளில் இருந்து பல பொருளாதாரங்கள் மீளத் தவறியுள்ளன.

குறிப்பாக 2022 ஆம் ஆண்டு, கொரோனா பேரிடரால் முடக்கப்பட்ட நமது பொருளாதாரம், உலகப் பொருளாதாரப் போக்குகள் மற்றும் குறிப்பாக, பொருளாதார நெருக்கடியின் போது மேலும் முடக்கப்பட்டதோடு, குடிநீர் விநியோகமும் கடும் ஆபத்தில் இருந்தது. நீண்ட காலமாக நமது பொருளாதாரத்தை பாதித்து வரும் கடன் நெருக்கடி வரலாற்றில் உச்சத்தை எட்டிய ஆண்டாக 2022 ஆம் ஆண்டை குறிப்பிட வேண்டும்.

இந்த பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அரசாங்கத்தினால் பல்வேறு உத்திகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதோடு, அரசியல் ஸ்திரமின்மை மற்றும் நாடு வங்குரோத்து நாடாக பிரகடனப்படுத்தப்பட்டமை போன்ற காரணங்களினால் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னுரிமை பாரிய சவாலுக்கு உள்ளாகியுள்ளது. வருடாந்தம் வரவு செலவுத் திட்டத்தினால் ஒதுக்கப்படும் நிதி ஏற்பாடுத் தொகை 50% குறைக்கப்பட்டது.

பண்டங்கள் மற்றும் சேவைகளின் விலைகளில் தொடர்ச்சியான அதிகரிப்பு காரணமாக, நாட்டில் மிகைப்படுத்தப்பட்ட பணவீக்க நிலைமை உருவாக்கப்பட்டு, ஒட்டுமொத்த பொருளாதாரமும் கடுமையான நெருக்கடிக்கு உள்ளாகியது. குறிப்பாக, கட்டுமானத் துறை பெரும் சரிவைச் சந்தித்தது. இந்த சூழ்நிலையானது சமூக நீர் திட்டங்களில் மிகவும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியதோடு, தற்போதுள்ள சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு, திணைக்களத்தின் எதிர்பார்க்கப்படும் கடமைப்பொறுப்பை அடையவும் பல்வேறு உத்திகள் பயன்படுத்தப்பட்டன.

தற்போது, இலங்கையில் குழாய் நீர் உள்ளடக்கதம் 59.76 சதவீதமாக உள்ளதுடன், இதில் 12.37 சதவீதமானது சமூக நீர் திட்டங்களால் உள்ளடக்கப்பட்டுள்ளது. 4285 நீர் கருத்திட்டங்களின் மூலம் 5000க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள 722,065 குடும்பங்கள் தங்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்து கொள்வதோடு, மொத்த பயனாளிகளின் எண்ணிக்கையை பொறுத்தவரை 35 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் இதன் மூலம் பயனடைகின்றார்கள்

நாட்டின் பொருளாதாரம் பல சவால்களையும் நெருக்கடிகளையும் எதிர்கொண்ட காலகட்டமாக 2021 ஆம் ஆண்டு வரலாற்றில் இடம்பெறும் அதேவேளை, இதுபோன்ற சவால்களை எதிர்கொண்டாலும் 2022 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட பத்தாயிரம் குடும்பங்களுக்கு (9429) புதிய நீர் இணைப்புகளை வழங்க முடியுமானதை எமது சாதனையாக இங்கே குறிப்பிடுதல் வேண்டும்.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் மூலம் அதன் அங்கத்துவ நாடுகளால் அடைய எதிர்பார்க்கப்படும் நிலைபேறான வளர்ச்சி இலக்குகளை அடைய, குறிப்பாக மக்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்குவதில் திணைக்களத்தின் அதிகபட்ச அர்ப்பணிப்பு மற்றும் தலையீட்டை 2022 ஆம் ஆண்டில் மேற்கொண்டுள்ள விதம் மற்றும் செயலாற்றுகை இந்த அறிக்கையினுள் சுருக்கமாகக் காட்டப்பட்டுள்ளது.

1.2 நிறுவனத்தின் தொலைநோக்கு, செயற்பணி, குறிக்கோள்கள்

தொலைநோக்கு

பாதுகாப்பான நீர் மற்றும் உடல்நலம்பேணல் மிக்க சுபீட்சமான நாடு

செயற்பணி

சுபீட்சமான இலங்கையை உருவாக்குகின்ற பொறுப்புமிக்க பணியில் பிரதானமானதொரு பங்காளராக இலங்கை மக்களின் நீர் மற்றும் உடல்நலத் தேவைப்பாடுகளை நிறைவேற்றும் பொருட்டு சமுதாய நீர் வழங்கல் திட்டங்கள் மற்றும் உடல்நலம் பேணல் அபிவிருத்தி, சமுதாய நீர் அமைப்புகளை வலுவூட்டல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல், நீர் மூலங்கள் மற்றும் சுற்றாடல் அபிவிருத்தி, திணைக்களத்தின் இயலளவு அபிவிருத்தி ஆகிய நடவடிக்கைகளை உரிய அனைத்து தரப்பினர்களினதும் சிறந்த பங்கேற்புடன் மற்றும் பகிரங்கத்தன்மையுடன் கூடியதாக செயற்படுத்தல்.

குறிக்கோள்கள்

- கிராமிய சமுதாயத்தினருக்கு குடிநீர் வழங்குகின்ற நாடு முழுவதிலுமுள்ள அண்ணளவாக 4500 சமூக மைய அமைப்புகளை ஒழுங்குமுறைப்படுத்தல்
- கிராமிய மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கலை உறுதிப்படுத்தல்
- கிராமிய மக்களின் உடல்நலம் பேணல் வசதிகளை மேம்படுத்தல்
- நாட்டில் சமூக பொருளாதார அபிவிருத்திக்காக கிராம மக்களின் முனைப்புடனான பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளல்
- பாதுகாப்பான குடிநீர் மற்றும் சிறந்த உடல்நலம் பேணல் பழக்க வழக்கங்களை உருவாக்குவதன் மூலம் அரசாங்கத்தினால் ஏற்க நேரிடுகின்ற செலவைக் குறைத்தல்
- மனித வள அபிவிருத்தி

1.3 பிரதானமான பணிகள்

1. கிராமிய நீர் வழங்கல் மற்றும் உடல்நலம் பேணல் துறைக்கு ஏற்புடையதான தேசிய கொள்கைகளைத் தயாரித்தல் மற்றும் இற்றைப்படுத்தலுக்காக உதவுதல்.

2. சமூக மைய அமைப்புக்களுக்கான யாப்புகள் மற்றும் உடன்படிக்கைகளை தயாரித்தல்.

3. சமூக மைய அமைப்புக்களால் மேற்கொள்ளப்படுகின்ற நிர்மாணிப்புகள், நீர் வழங்கல் திட்டங்களின் பராமரிப்பு நடவடிக்கைகள், முகாமைத்துவம் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்.

4. சமூக மைய அமைப்புக்களின் கடமைப் பொறுப்புகளை இலகுபடுத்தும் பொருட்டு பல்வேறு மட்டங்களில் ஏற்புடைய அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளுடனான இணைப்பாக்கம்.

5. சமூக மைய அமைப்புக்களின் நீர் கட்டண அறவீட்டு முறைகளை மிகவும் நியாயமானதாகவும் ஒழுங்காகவும் தயாரித்து பேணிவருவதற்கான அளவுகோள்களை அறிமுகப்படுத்தல் மற்றும் கண்காணித்தல்.

6. சமூக மைய அமைப்புக்களின் நிதி முகாமைத்துவத்தை நிதியியல் ஒழுக்கத்துடன் கூடியதாக முறைசார்ந்த விதத்தில் பேணிவருவதற்குத் தேவையான உதவிகளை வழங்குதல் மற்றும் ஒழுங்குமுறையாக்கல்.

7. சமூக மைய அமைப்புக்களின் நடவடிக்கைகளை பயனுறுதியான விதத்தில் மேற்கொள்வதற்காக பங்கேற்பு பின்ஆய்வு முறையியலொன்றை அமுல்படுத்தல்.

8. சமூக மைய அமைப்புக்கள் மற்றும் அவற்றினால் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற நீர் வழங்கல் திட்டங்களின் நீண்டகால இருப்பை உறுதி செய்யும் பொருட்டு மூலோபாய வழிமுறைகளை அடையாளங்காணல் மற்றும் அமுல்படுத்துவதற்கு சமூக மைய அமைப்புக்களை ஊக்குவித்தல் மற்றும் உதவியளித்தல். இதன் பொருட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய மறுசீரமைப்புகள் மற்றும் மேம்படுத்தல்களுக்குத் தேவையான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை பெற்றுக் கொடுத்தல்.

9. சமூக மைய அமைப்புக்களால் வழங்கப்படுகின்ற நீரை தேவைப்படும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சுத்திகரித்து வழங்குவதற்கு சமூக மைய அமைப்புக்களை ஆற்றுப்படுத்தல் மற்றும் அதற்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

10. சமூக மைய அமைப்புகள், பிரதேச ஒன்றியங்களை தாபித்தல், மாவட்ட ஒன்றியங்களை தாபித்தல் மற்றும் தேசிய ஒன்றியங்களை தாபித்தல்.

11. சமூக மைய அமைப்புக்களுக்கு சொந்தமான நீர் வழங்கல் திட்டங்களின் மூலம் வழங்கப்படுகின்ற நீரின் தரத்தை தொடர்ச்சியாக கண்காணிக்கும் பொருட்டு நடைமுறை முறையியல் ஒன்றை இனங்காணல் மற்றும் அமுல்படுத்தல்.

12. நீர் மூலங்களைப் பாதுகாத்தல், மேம்படுத்தல் மற்றும் நீர் பாதுகாப்புத் திட்டங்களை தயாரித்தல்.


13. சமுதாய நீர் கருத்திட்டங்களின் இருப்பை உறுதி செய்யும் பொருட்டு சமூக மைய அமைப்பின் முகாமைத்துவப் பணிகளை முறைசார்ந்ததாக்குதல் மற்றும் தேவையான பயிற்சிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

14. மழை நீர் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.


1.4 நிறுவனம் பற்றிய குறிப்பு

இத்திணைக்களத்தின் கடமைப்பொறுப்பை மக்களுக்கு மத்தியில் கொண்டு செல்வதற்காக பணிப்பாளர் நாயகம் ஒருவரின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற தலைமை அலுவலகம் ஒன்றையும் 25 மாவட்ட அலுவலகங்களையும் அதற்குரியதான பணியாட்டொகுதி ஒன்றையும் உள்ளடக்கியுள்ளது. திணைக்களத்திற்காக முழுமொத்தமாக 511 பேரைக் கொண்ட ஒரு பணியாட்டொகுதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதோடு, 2022.12.31 ஆம் திகதியளவில் 466 பேர் கொண்ட முழுமொத்த பணியாட்டொகுதியொன்று சேவையாற்றுகின்றது. (பதவிநிலை உத்தியோகத்தர்கள் 22 பேர் உள்ளடங்கலாக). ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவும் உள்ளடங்குகின்றவாறு பட்டதாரி ஒருவர் இணைக்கப்பட்டுள்ளார் என்பதோடு பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் வலய மட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளனர்.

அதன் நிறுவனக் கட்டமைப்பு பின்வருமாறு.


நிறுவனக் கட்டமைப்பு – தலைமை அலுவலகம்
பணிப்பாளர் நாயகம்
பணிப்பாளர் (நிர்வாகம்)
பிரதான கணக்காளர்
பணிப்பாளர் (அபிவிருத்தி, திட்டமிடல்)
பணிப்பாளர் (தொழில்நுட்பம்)
பணிப்பாளர் (பெறுகைகள்)
பணிப்பாளர் (தொழிற்பாடு மதிப்பீடு)
உதவி பணிப்பாளர் (நிர்வாகம்)
கணக்காளர்
உதவி பணிப்பாளர் (அபிவிருத்தி, திட்டமிடல்)
பிரதான
புவிச்
இரசாயன
சிவில்
நிர்வாக உத்தியோகத்தர்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
சமூக விஞ்ஞானி
சிவில் / மாவட்ட பொறியியலாளர்
இயந்திர
உள்ளக
அபிவிருத்தி உத்தியோகத்தர்
முகாமைத்துவ உதவியாளர்/ எழுதுனர்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
முகாமைத்துவ உதவியாளர்/ எழுதுனர்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
தொழில்நுட்ப உதவியாளர்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
தொழில்நுட்ப உதவியாளர்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
முகாமைத்துவ உதவியாளர்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
சாரதி
அலுவலக உதவியாளர்
சாரதி
அலுவலக உதவியாளர்
சாரதி
அலுவலக உதவியாளர்
சாரதி
அலுவலக உதவியாளர்
சாரதி
அலுவலக உதவியாளர்
சாரதி
அலுவலக உதவியாளர்

மாவட்ட நிறுவனக் கட்டமைப்பு



1.3 திணைக்களத்தின் பிரதானமான பிரிவுகள்

2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இத்திணைக்களம் பணிப்பாளர் நாயகம் ஒருவரின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வருவதோடு, தற்போது ஒரு தலைமை அலுவலகத்தையும் 25 மாவட்ட அலுவலகங்களையும் உள்ளடக்கியதாயுள்ளது. தலைமை அலுவலகம் பின்வரும் துறைகளின் கீழ் இயங்கிவருகின்றது.

1. நிர்வாகப் பிரிவு
2. அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவு
3. கணக்குகள் பிரிவு
4. தொழில்நுட்பப் பிரிவு
5. பெறுகைகள் பிரிவு
6. தொழிற்படுத்தல் மற்றும் மதிப்பீட்டுப் பிரிவு
7. உள்ளக கணக்காய்வுப் பிரிவு

நிர்வாகப் பிரிவு

தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றி பொதுமக்களுக்கு வினைத்திறன்மிக்க மற்றும் விளைவுத்தாக்கம்மிக்க சேவையை வழங்கும் பொருட்டு மனித வளங்களை வழிப்படுத்தல் மற்றும் திணைக்களத்தின் நிதி நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு வழங்குதல் நிர்வாகப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணியாகும். திணைக்களத்தின் பணியாட்டொகுதிக்கான சேவையில் ஈடுபட்டுள்ளபோது மற்றும் மனித வள அபிவிருத்திக்கு ஏற்புடையதான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தல் நிர்வாகப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. மேற்படி அனைத்து நடவடிக்கைகளையும் முகாமைத்துவம் செய்யும் பொருட்டு இலங்கை நிர்வாகச் சேவை 1 ஆம் வகுப்பு பணிப்பாளர் ஒருவர் மற்றும் உதவிப் பணிப்பாளர்கள் உள்ளிட்ட 21 பேரைக் கொண்ட ஒரு பணியாட்டொகுதி சேவையாற்றுகின்றது.

அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவு

அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பிரிவானது 2015 ஆம் ஆண்டில் தனியானதொரு பிரிவாகத் தாபிக்கப்பட்டுள்ளதோடு, திணைக்களத்திற்கு ஏற்புடையதான அனைத்து அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் பணிகளும் இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. மாவட்ட மட்டத்தில் அபிவிருத்தித் தேவைப்பாடுகளை இனங்காணல், அதன்படி வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தை தயாரித்தல், அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுலாக்கப்படுவதை மேற்பார்வை செய்தல், சமூக மைய அமைப்புக்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தல், சமூக மைய அமைப்புகளைப் பதிவு செய்தல், முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் செயலாற்றுகை

அறிக்கைகளைத் தயாரித்தல், கருத்திட்ட அறிக்கைகளைத் தயாரித்தல் உள்ளிட்ட நேரடியாக அபிவிருத்தியுடன் தொடர்புடைய வேறு பல செயற்பாடுகளும் இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. மேற்படி அனைத்து பணிகளையும் கண்காணிப்பதற்கும் மேற்பார்வை செய்வதற்குமாக இலங்கை திட்டமிடல் சேவையின் 1 வகுப்பின் பணிப்பாளர் ஒருவர் உள்ளிட்ட பணியாளர்கள் 7 பேரைக் கொண்ட ஒரு பணியாட்டொகுதி சேவையாற்றுகின்றது.

கணக்குகள் பிரிவு

இப்பிரிவும் 2015 ஆம் ஆண்டில் தனியானதொரு பிரிவாக தாபிக்கப்பட்டுள்ளது. இப்பிரிவின் மூலம் திணைக்களத்திற்கு ஏற்புடைய அனைத்துக் கொடுப்பனவுப் பணிகளையும் மேற்கொள்ளல், மாதாந்த, வருடாந்த கணக்கு அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் திறைசேரிக்குப் பெற்றுக்கொடுத்தல், இறுதிக் கணக்குகளைத் தயாரித்தல், முற்பணத் தீர்ப்பனவுப் பணிகள், கணக்காய்வு ஐயவினாக்களுக்கு விடையளித்தல், கணக்குக் குழு நடவடிக்கைகளின்போது இது தொடர்பிலான இணைப்புப் பணிகளை மேற்கொள்ளல், வருடாந்த கணக்குத் தீர்ப்பனவுப் பணிகள் ஆகியன இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற முதன்மையான பணிகளாகும். மேற்படி அனைத்து பணிகளையும் கண்காணிப்பதற்கும் மேற்பார்வை செய்வதற்குமாக இலங்கை கணக்காளர்கள் சேவையின் 1 ஆம் வகுப்பு பிரதம கணக்காளர் ஒருவர் உள்ளிட்ட பணியாட்டொகுதியில் 18 பேர் சேவையாற்றுகின்றனர்.

தொழில்நுட்பப் பிரிவு

இப்பிரிவும் 2015 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டுள்ளது. திணைக்களத்துக்குரிய அனைத்துத் தொழில்நுட்பப் பணிகளும் இப்பிரிவின் மூலம் நிறைவேற்றப்படுகின்றன. புதிய நீர் வழங்கல் கருத்திட்டங்களை நிர்மாணிப்பதற்கான திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகளைத் தயரித்தல், இருப்பிலுள்ள கருத்திட்டங்களின் புனரமைப்புப் பணிகள் மற்றும் பராமரிப்புப் பணிகளுக்கு ஏற்புடையதான அனைத்து மதிப்பீடுகளையும் தயரித்தல், நிர்மாணிப்புப் பணிகளை பரிசோதித்து தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கல், நிர்மாணிப்புகளின் மேற்பார்வை, கட்டணப் பட்டியல்களைத் தயரித்தல். அங்கீகாரம் வழங்குதல், தொழில்நுட்பத் துறையுடன் தொடர்புடைய பயிற்சிகளை ஒழுங்கு செய்தல், சமுதாய நீர் வழங்கல் திட்டங்களின் பராமரிப்பு தொடர்பாக சமூக மைய அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு தேவையான பயிற்சியைப் பெற்றுக் கொடுப்பதற்கு உதவுதல், வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு உதவியளித்தல் ஆகியன இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற பிரதானமான பணிகளாகும். மேற்படி அனைத்து நடவடிக்கைகளையும் கண்காணிப்பதற்கும் மேற்பார்வை செய்வதற்குமாக இலங்கை பொறியியலாளர் சேவையின் 1 ஆம் வகுப்பு பணிப்பாளர் ஒருவர், பொறியியலாளர் ஒருவர் உள்ளிட்ட பணியாட்டொகுதியில் 12 பேர் சேவையாற்றுகின்றனர்.

பெறுகைகள் பிரிவு

இப்பிரிவு தனியானதொரு பிரிவாக 2019 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. திணைக்களத்தின் பணிகளைப் பேணிவருவதற்குத் தேவையான கொள்வனவுப் பணிகள் அதேபோன்று சமுதாய நீர் வழங்கல் கருத்திட்டப் பணிகளை பேணிவருவதற்குத் தேவையான அனைத்துக் கொள்வனவுப் பணிகளை பெறுகைகள் வழிகாட்டி மற்றும் நிதி ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப மேற்கொள்ளல் இப்பிரிவின் கடமைப் பொறுப்பாகும். 2019 ஆம் ஆண்டுக்கு முன்னர் இப்பணிகள் தொழில்நுட்பப் பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்பட்டதோடு, அதனை மேலும் பகிரங்கத்தன்மையுடன் நிறைவேற்றுவதற்காக இப்பிரிவைத் தனியானதாகத் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேற்படி அனைத்து நடவடிக்கைகளையும் கண்காணிப்பதற்கும் மேற்பார்வை செய்வதற்குமாக இலங்கை பொறியியலாளர் சேவையின் 1 ஆம் வகுப்பு பணிப்பாளர் ஒருவர், பொறியியலாளர் ஒருவர் உள்ளிட்ட பணியாட்டொகுதியில் 08 பேர் சேவையாற்றுகின்றனர்.

தொழிற்படுத்தல் மற்றும் மதிப்பீட்டுப் பிரிவு

திணைக்களத்தினால் செயற்படுத்தப்படுகின்ற அனைத்து அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் அதேபோன்று நாடு முழுவதிலும் தாபிக்கப்பட்டுள்ள அனைத்து சமூக மைய அமைப்புகளையும் உரியவாறு கண்காணித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீடு செய்கின்ற கடமைப்பொறுப்பு இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. திட்டமிடப்படும் கருத்திட்டங்களை வினைத்திறனுடனும் பயனுழுதியான விதத்திலும் நிறைவு செய்து மக்களுக்கு நலன்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு இப்பிரிவு தீவிர தலையீட்டுடன் செயற்படுகின்றது. குறிப்பாக உலக வங்கி உதவியின் கீழ் இது தொடர்பில் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய முகாமைத்துவ தகவல் முறைமையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அதனூடாக கிராமிய நீர் வழங்கல் துறையில் முறைசார்ந்த அபிவிருத்தி மற்றும் திட்டமிடலுடன் தொடர்புடைய மிகவும் துல்லியமானதும் இற்றைப்படுத்தப்பட்டதுமான தரவுகள் மற்றும் தகவல்களை இப்பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ள முடியுமாயுள்ளமை விசேட வெற்றியாகும். அனைத்து சமுதாய நீர் வழங்கல் கருத்திட்டங்கள் உள்ளடங்கிய கனணிமயப்படுத்தப்பட்ட தகவல் முறைமையொன்றைத் தயாரித்தல், திணைக்களத்திற்கான இணையத் தளமொன்றைத் தயாரித்தல், மக்களுக்கு உடனடித் தொலைபேசி அழைப்புகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான வசதிகளை ஏற்பாடு செய்வதன் மூலம் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொடுப்பதை துரிதப்படுத்தல், சமூக மைய அமைப்புகளின் பணிகளை நெருங்கியிருந்து மேற்பார்வை செய்வதற்கான முறைமையொன்றைத் தயாரிப்பதன் ஊடாக மக்களுக்கு மிகத் துரிதமானதும் வினைத்திறன்மிக்கதுமானதொரு சேவையை வழங்குதலும் அதேபோன்று அபிவிருத்திக் கருத்திட்டங்களை மிகப் பயனுறுதியானதாகவும் வினைத்திறனுடனும் நெறிப்படுத்தலும் இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

நெறிப்படுத்தல் மற்றும் மதிப்பீட்டு முறையியலை மேலும் பயனுறுதியாகவும் வினைத்திறனாகவும் செயற்படுத்துவதற்கும் அதற்கமைய முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் மற்றும் ஏனைய கூட்டங்களுக்கு உத்தியோகத்தர்களை கொழும்புக்கு வரவழைத்து

மேற்கொள்ளப்படுகின்ற அனாவசியமான செலவுகள் மற்றும் நேரத்தை முகாமைத்துவம் செய்தலும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. மேற்படி அனைத்து நடவடிக்கைகளையும் கண்காணிப்பதற்கும் மேற்பார்வை செய்வதற்குமாக இலங்கை திட்டமிடலாளர் சேவையின் 1 ஆம் வகுப்பு பணிப்பாளர் ஒருவர், உள்ளிட்ட பணியாட்டொகுதியில் 08 பேர் சேவையாற்றுகின்றனர்.

உள்ளக கணக்காய்வுப் பிரிவு

இப்பிரிவு தனியானதொரு பிரிவாக 2020 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற பணிகளை மிகவும் சரியான விதத்தில் மேற்கொள்ளலும், உள்ளக நிர்வாக செயற்பாட்டை பகிரங்கத்தன்மையுடன் சரியான முறையியலொன்றின்படி மேற்கொள்வதற்கு ஆற்றுப்படுத்துவதன் ஊடாக நிகழ்கின்ற தவறுகள் மற்றும் குறைபாடுகளைக் குறைததலும் இப்பிரிவு தாபிக்கப்பட்டதன் முதன்மையான குறிக்கோளாகும். அதேபோன்று சமுதாய நீர் கருத்திட்டங்களில் நடைபெறுகின்ற தவறுகள் மற்றும் குறைபாடுகளைக் குறைத்து சரியானதொரு செயற்பாட்டினுள் நிறுவனத்தை இட்டுச்செல்லலும், ஊழல் மோசடிகள் நடைபெறுவதற்குள்ள வாய்ப்புகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தலும் இதனூடாக எதிர்பார்க்கப்படுகின்ற மேலுமொரு குறிக்கோளாகும். மேற்படி அனைத்து நடவடிக்கைகளையும் கண்காணிப்பதற்கும் மேற்பார்வை செய்வதற்குமாக இலங்கை கணக்காளர் சேவையின் 11 ஆம் வகுப்பு உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர், உள்ளிட்ட மூன்று உத்தியோகத்தர்களுக்கான பதவிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டில் இக்கணக்காய்வுப் பிரிவு முறைசார்ந்த விதத்தில் தாபிக்கப்பட்ட போதிலும் வெற்றிடமாகிய 11 ஆம் வகுப்பு கணக்காளர் ஒருவரை நியமிப்பதிலுள்ள சிரமத்தின் காரணமாக இதன் நடவடிக்கைகள் செயலிழந்துள்ளன. அரசாங்க நிர்வாக அமைச்சுக்கு இது தொடர்பில் அறிவிக்கப்பட்டுள்ளதோடு, மிதத் துரிதமாக இப்பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

மாவட்ட அலுவலகங்கள்

தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தின் கடமைகளை மக்களுக்கு மிகவும் அண்மித்ததாக ஆக்கும் பொருட்டு அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்குகின்றவாறு மாவட்ட அலுவலகங்கள் தாபிக்கப்பட்டுள்ளன. மாவட்டத்தில் காணப்படுகின்ற சமுதாய நீர் வழங்கல் கருத்திட்டங்களை அடையாளங்காணல், அக்கருத்திட்டங்களை திணைக்களத்தில் பதிவு செய்தல், நீர் வழங்கல் கருத்திட்டங்களின் அபிவிருத்தித் தேவைகளை அடையாளங்காணல் மற்றும் தகுந்த தரப்பினர்களுக்கு ஆற்றுப்படுத்தி தேவையான நிதியங்களைப் பெறுதல், சமூக மைய அமைப்புகளின் பிரச்சினைகளை இனங்காணல், தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் திறன்வளர்ச்சி, தேவையான தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் நீரின் தரத்தைப் பேணிவரும் பொருட்டு சமூக மைய அமைப்புகளை ஆற்றுப்படுத்தல், நீரேந்து பிரதேசங்களை பாதுகாப்பதற்கு மக்களை

ஊக்குவித்தல் மற்றும் தகவல் திரட்டலை இற்றைப்படுத்தல் ஆகியன மாவட்ட அலுவலகங்களின் மூலம் நிறைவேற்றப்படுகின்ற பிரதானமான பணிகளாகும்.

மேற்படி கடமைகளை நிறைவேற்றுவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர் ஒருவரின் கீழ் முழு மாவட்டத்தையும் உள்ளடக்கக்கூடிய வகையில் மாவட்டதின் பரப்பளவு, சமூக மைய அமைப்புகளின் எண்ணிக்கை, இருப்பிலுள்ள குழாய் நீர் உள்ளடக்கம் ஆகிய காரணிகளை அடிப்படையாகக் கொண்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பணியாட்டொகுதி ஒன்று இணைக்கப்பட்டு சேவையாற்றி வருகின்றது. இதற்கு மேலதிகமாக தொழில்நுட்ப வழிகாட்டல்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக மாகாண மட்டத்தில் மாவட்டப் பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டுள்ளனர்.

1.6 அமைச்சு/ திணைக்களம்/ மாகாணசபையின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்கள்/ நிதியங்கள்

திணைக்களத்தின் கீழ் காணப்படும் நிறுவனங்கள் அல்லது நிதியங்கள் இல்லையென்பதோடு, திணைக்களத்தின் கடமைகளை மக்களுக்கு மேலும் அண்மித்ததாக ஆக்கும் பொருட்டு அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்குகின்றவாறு மாவட்ட அலுவலகங்கள் தாபிக்கப்பட்டுள்ளன. திணைக்களத்தின் அனைத்து நிர்வாக மற்றும் நிதி அலுவல்கள் மத்தியமயப்படுத்தப்பட்டதாக மேற்கொள்ளப்படுவதோடு, சமுதாய நீர் வழங்கல் கருத்திட்டங்களின் பணிகள் மாவட்ட அலுவலகங்களின் ஊடாக நடைபெறுகின்றன.

1.7 வெளிநாட்டு உதவிகளைப் பெறுகின்ற கருத்திட்டங்கள் பற்றிய தகவல்கள் (உள்ளதாயின்)

திணைக்களத்தின் கீழ் நேரடியாக அமுலாக்கப்படுகின்ற கருத்திட்டங்கள் இல்லை என்பதோடு, நீர் வழங்கல் திணைக்களத்தின் கீழ் அமுலாக்கப்படுகின்ற WASSIP கருத்திட்டம், மகாவலி மற்றும் சுற்றாடல் அமைச்சின் கீழ் அமுலாக்கப்படுகின்ற CRIWMP, EU நிதியத்தின் கீழ் அமுலாக்கப்படுகின்ற SolidariDad, Oxfam கருத்திட்டங்கள் ஆகியவற்றின் தரப்பினர் ஒருவராக திணைக்களம் செயலாற்றுகின்றது.

02வது அத்தியாயம்

முன்னேற்றம் மற்றும் தொலைநோக்கு

விசேட சாதனைகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

2.1 2022 ஆம் ஆண்டில் அமுலாக்கப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள்

தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்திற்கு 2022 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட முழுமொத்த நிதி ஏற்பாட்டுத் தொகை ரூபா 603.69 மில்லியனாக இருந்த போதிலும் மாகாணசபைகள் மற்றும் பல்வேறு நிறுவனங்களின் வேண்டுகோளை அடிப்படையாகக் கொண்டு ரூபா 1,186.57 மில்லியன் அளவிலான நிதி ஏற்பாட்டுத் தொகையை பெற்றுக்கொள்வதற்கு இயலுமாயிருந்தமை திணைக்களத்திற்கு கிடைத்ததொரு வெற்றியாகும். திணைக்களத்தின் நிதி ஏற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு அமுலாக்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட 364 கருத்திட்டங்களின் எண்ணிக்கையை 940 வரை அதிகரிக்கச் செய்வதற்கு திணைக்களத்திற்கு வெளிவாரி நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட நிதி ஏற்பாடுகள் உதவியாக அமைந்ததென்பதை இங்கே குறிப்பிடுதல் வேண்டும். ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களில் 324 இன் வேலைகளை நிறைவு செய்வதற்கு இயலுமாயிருந்ததோடு அமுலிலுள்ள கருத்திட்டங்களின் எண்ணிக்கை 616 ஆகும். பெரும் சவால்களு க்கு மத்தியில் அமுலாக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் முழுமொத்த அபிவிருத்தி வேலைகளுக்கும் ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ஏற்பாட்டில் 76.33% அளவிலான உயர் நிதியியல் முன்னேற்றத்தை அறிக்கையிடுவதற்கு இயலுமாயிருந்தமையும் விஷேட வெற்றியாகும்.

2.1.1 முழுமொத்த செயற்பாட்டுத் திட்டத்தின் முன்னேற்றம்

அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை	940
நிறைவு செய்யப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை	324
தற்போது அமுலிலுள்ள கருத்திட்டங்களின் எண்ணிக்கை	616
கிடைத்த மொத்த நிதி ஏற்பாடு (வெளி நிறுவனங்களிடமிருந்து வரும் மானியங்கள் உட்பட)	ரூ.மில். 1186.57
மொத்த செலவு	ரூ.மில். 813.20
கைவசமுள்ள கட்டணப் பட்டியல்கள்	ரூ.மில். 92.54

2.1.2 திணைக்கள நிதி ஏற்பாட்டின் கீழ் அமுலாக்கப்பட்ட கருத்திட்டங்களின் முன்னேற்றம்

	நிகழ்ச்சித்திட்டம்	அமுலிலுள்ள கருத்திட்டம்	கிடைத்த மொத்த நிதி ஏற்பாடு (ரூ.மி.)	அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்ட எண்ணிக்கை	நிதியியல் முன்னேற்றம்		பௌதீக முன்னேற்றம்	
					செலவு (ரூ.மி.)	கைவசமுள்ள கட்டணப் பட்டியல் (ரூ.மி.)	அமுலிலுள்ள கருத்திட்டம்	நிறைவு பெற்ற கருத்திட்டம்
1	சமுதாய நீர் வழங்கல் கருத்திட்டங்களின் மேம்பாடு.	இருப்பிலுள்ள சமுதாய நீர் திட்டங்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு மற்றும் உடல்நலம் பேணல் வசதிகளை மேம்படுத்தல்	100	80	72.36	2.01	70	10
2	பிரஜா ஜல அபிமானி – நிகழ்ச்சித்திட்டம்	25 மாவட்டங்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட புதிய கருத்திட்டங்கள் 214 இன் வேலைகளை நிறைவு செய்தல்	453.98	214	399.42	40.69	201	50
		30 சமுதாய நீர் கருதர்திட்டங்களுக்கான நெனோ சுத்திகரிப்பு முறைமைகளை தாபித்தல்	38.49	30				
		7 சமுதாய நீர் கருத்திட்டங்களின் புனரமைப்பு வேலைகளை நிறைவு செய்தல்	7.53	7				
3	நீர் பாதுகாப்புத் திட்டம்	சமுதாய நீர் கருத்திட்டங்களுக்கான நீர் பாதுகாப்பு திட்டம் மற்றும் நிலக்கீழ் நீர் மீள்செறிவுக்கான கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்	3.69	33	1.37	0.71	11	22
			603.69	**364**	**473.15**	**43.41**	**282**	**82**

2.2 விசேட சாதனைகள்

2022 ஆம் ஆண்டில் ஒரு நாடு என்ற வகையில் கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியதன் அடிப்படையில் அனைத்து துறைகளிலும் வீழ்ச்சி ஏற்பட்ட போதிலும் கிராமிய நீர் வழங்கல் துறையினுள் திணைக்களம் என்ற வகையில் விசேட சாதனைகளை அடையப்பெறுவதற்கு இயலுமாயிருந்தது.

1. ஆயிரம் கிராமங்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கும் குறிக்கோளுடன் நடுத்தர கால நிகழ்ச்சித்திட்டமாக புதிய நீர் வழங்கல் கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட "பிரஜா ஜல அபிமானி" நிகழச்சித்திட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லல். இதனூடாக 2022 ஆம் ஆண்டில் 9,429 நீர் இணைப்புகள் வழங்கப்பட்டன.

2. சிறுநீரக நோய் அதிகளவில் காணப்படுகின்ற மாவட்டங்களில் நெனோ சுத்திகரிப்பு முறைமைகள் 90 ஆரம்பித்து வைக்கப்பட்டமை மற்றும் அதில் 50 மக்கள் உரிமைக்கு கையளிக்கப்பட்டமை.

3. தற்போது அமுலிலுள்ள 152 சமுதாய நீர் கருத்திட்டங்களுக்கு நீர் பம்பிகளை பெற்றுக்கொடுத்தல் மற்றும் 135 நீர் கருத்திட்டங்களில் அத்தியாவசிய புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளல்.

4. நீர் பாதுகாப்புத் திட்டம் அமுல்படுத்தப்படுகின்ற 33 நீர் கருத்திட்டங்களில் அத்தியாவசிய புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளல்.

5. திணைக்களத்தின் பணிகளை நிறைவேற்றுகின்றபோது அத்தியாவசியமான பௌதீக மற்றும் மனித வளத் தேவைகளை நிறைவு செய்தல். 16 பேராகிய அங்கீகரிக்கப்பட்ட பொறியியலாளர் பணியாட்டொகுதியை நிறைவு செய்துகொள்ளல்.

6. WASSIP கருத்திட்டத்தின் கீழ் தரவு முறைமையை இற்றைப்படுத்தல் மற்றும் வெப்தளத்தை அடிப்படையாகக் கொண்ட தகவல் முகாமைத்துவம் பற்றி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி அளித்தல்.

7. WASSIP கருத்திட்டத்தின் கீழ் அனைத்து விதத்திலுமான நீர் சுத்திகரிப்பு தொழில்நுட்பம் பற்றி பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு

8. UNDP நிதி ஏற்பாட்டின் கீழ் தொழில்நுட்ப இயலளவு அபிவிருத்தி மற்றும் கருத்திட்ட திட்டமிடல் தொடர்பில் பணியாட்டொகுதிக்கு பயிற்சியளித்தல் மற்றும் சமூக மைய அமைப்புகளுக்கு மத்தியில் அறிவைப் பகிர்ந்துகொள்ளல் மற்றும் இணைப்பாக்கம் தொடர்பில் விழிப்புணர்வூட்டல்களை மேற்கொள்ளல்.

9. வட மாகாணத்தில் 3 மாவட்டங்களில் மீளக் குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு நெனோ சுத்திகரிப்புப் பொறிகள் 50 தாபித்தல்.

10. 2022 உலக நீர் தினம் சார்பில் மிகச் சிறந்த சமூக மைய அமைப்பை தெரிவு செய்து பாராட்டுத் தெரிவித்தல் மற்றும் சமூக மைய அமைப்பு அங்கத்தவர்களுக்கு காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகப்படுத்தல்.

11. வர்ல்ட் விஷின் நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து சமுதாய நீர் கருத்திட்டங்கள் தொடர்பில் நீர் மாநாடு ஒன்றை நடத்துதல்.

2.3 எதிர்கால இலக்குகள்

நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களின் கீழ் 2030 ஆம் ஆண்டளவில் அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீரை வழங்கும் பொருட்டு அதன் அங்கத்துவ நாடு என்ற வகையில் இலங்கையும் கடப்பாடுடையதாக இருப்பதால் எதிர்வரும் காலம் திணைக்களத்திற்கு மிகவும் சவால்மிக்கதொரு காலமாக காணப்படுகின்றதெனக் குறிப்பிடலாம். நிலவுகின்ற நெருக்கடியான காலத்தினுள் இருப்பிலுள்ள வளங்களை முகாமைத்துவம் செய்து கிராமிய சமூகத்திற்கு பாதுகாப்பான குடிநீரை பெற்றுக்கொடுப்பதற்காக திணைக்களத்தின் எதிர்கால இலக்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

- திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து நீர் வழங்கல் கருத்திட்டங்களையும் அரசாங்கத்திற்கு சுமையாகாதவாறு பேணிவரத்தக்க வகையில் அந்த அமைப்புகளை வலுவூட்டல்.
- கடந்த நான்கு தசாப்த காலத்தினுள் தாபிக்கப்பட்டுள்ள சமுதாய நீர் கருத்திட்டங்களின் ஊடாக வழங்கப்படுகின்ற நீரின் தரத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான நீர் சுத்திகரிப்பு முறைகளை தாபித்தல்.
- தேசிய நீர் வழங்கல் சபையினால் நீர் வழங்க முடியாதுள்ள கஷ்டப் பரதேசமான ஆயிரம் கிராமங்களுக்கு பாதுகாப்பான குடிநீரை வழங்கும் குறிக்கோளுடன் நடுத்தர கால நிகழ்ச்சித்திட்டமாக ஆரம்பிக்கப்பட்ட ‘‘பிரஜா ஜல அபிமானி’’ நிகழ்ச்சித்திட்டத்தை தொடர்ச்சியாக அமுல்படுத்தல்.
- ஒவ்வொரு சமுதாய நீர் வழங்கல் கருத்திட்டத்துக்கும் நீர் பாதுகாப்புத் திட்டமொன்றைத் தயரித்து அமுல்படுத்தல்.
- கிராமிய நீர் வழங்கல் துறைக்காக தாபிக்கப்பட்ட தேசிய தரவு முறைமையை இற்றைப்படுத்தி பேணிவருதல்.
- கிராமிய மற்றும் பெருந்தோட்ட சமுதாயத்தை அடிப்படையாகக் கொண்டு உடல்நலம் பேணும் மலசல கூட வசதிகளில் 100% இலக்கை அடையப்பெறுதல்.
- சிறுநீரக நோய் பரவலாகக் காணப்படுகின்ற பிரதேசங்களின் மக்களுக்கு பாதுகாப்பான குடிநீரை பெற்றுக் கொடுக்கும் பொருட்டு சுத்திகரிப்பு முறைமைகளைத் தாபித்தல். (RO Plant/Nano Plant/EDR Plant)

2.4 சவால்கள்

2022 ஆம் ஆண்டு இந்நாட்டின் பொருளாதாரம் முன் எப்போதும் எதிர்நோக்காத விதத்திலான சவால்மிக்க பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்த ஒரு ஆண்டாகுமென இங்கே குறிப்பிடப்பட வேண்டிதாயுள்ளது.

நாட்டினுள் உருவாகிய பொருளாதார உறுதியற்ற தன்மையின் காரணமாக இத்துறையிலும் பாரியதொரு பின்னடைவு நிலைமை காணப்பட்டது.

1. நிதி ஏற்பாடுகள் போதியளவில் அங்கீகரிக்கப்படாமை மற்றும் ஆண்டுக்காக அங்கீகரிக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளில் 50% குறைக்கப்பட்டமை.

2. ஒவ்வொரு உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்கும் ஒப்பந்தகாரர்கள் விலை மாற்றங்களை வேண்டி நின்றதால் நிதி ஏற்பாடுகள் போதியதாக இல்லாதிருந்தமை.

3. நிர்மாணிப்புத் துறையில் காணப்படுகின்ற பொருட்களுக்கான பற்றாக்குறை.

4. கட்டுநிதி உரிய விதத்தில் கிடைக்காமையினால் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட காலத்தினுள் கருத்திட்டங்களை நிறைவு செய்ய முடியாதிருந்தமை.

5. சமூக மைய அமைப்புகளை ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக காணப்படுகின்ற சட்ட வரைச்சட்டகம் அங்கீகரிக்கப்படுவதில் உள்ள கால தாமதம்.

6. சமுதாய நீர் கருத்திட்ட எண்ணக்கருவினுள் கருத்திட்டங்களின் தொடர்ச்சியான இருப்புக்கு அத்தியாவசியமான காரணியாக உள்ள சமுதாய பங்களிப்பைப் பெறுவதில் சிக்கல்கள் உருவாகியமை.

7. நீர் மூலங்கள் வற்றிவிடுதல், போதுமாயில்லாமை மற்றும் காணப்படுகின்ற நீர் மூலங்கள் மாசடைதல் காரணமாக உருவாகியுள்ள நெருக்கடிகள், காலநிலை மாற்றங்கள் அதேபோன்று மனிதனின் பல்வேறான செயற்பாடுகள் காரணமாக நீர் மூலங்கள் அசுத்தமடைதல் மற்றும் மாசடைதலுக்கு உள்ளாதல் நேரிட்டுள்ளது. நகரமயமாக்கல் மற்றும் நாட்டினுள் நடைபெறுகின்ற துரித அபிவிருத்திச் செயற்பாடுகளின் முன்னே கூட இது பெரும் நெருக்கடியான நிலைமைக்கு உள்ளாகி உள்ளது. காலநிலை மாற்றங்கள் அதேபோன்று திட்டமிடப்பட்ட கருத்திட்டங்களின் இலக்கிடப்பட்ட குழுக்கள் திட்டத்தை விஞ்சிச் சென்று நலன்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு செயற்படுவதன் ஊடாக நீர் ஊற்றுக்கள் போதியதாக இல்லாமையும் பெரும் சவாலாகும்.

8. கருத்திட்டங்களை அமுல்படுத்துகின்றபோது வெளிவாரி தரப்பினர்களால் நிறைவேற்றிக் கொள்ளப்பட வேண்டிய பணிகள் (காணி அனுமதி, மின்சாரம், வீதி அனுமதியைப் பெறுதல்) தாமதமடைவதன் காரணமாக கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கும் அதேபோன்று வேலைகள் நிறைவு செய்யப்பட்ட போதிலும் மக்களுக்கு நலன்களைப் பெற்றுக் கொடுப்பதிலும் தாமதம் ஏற்படுதல்.

9. தற்போது அமுலிலுள்ள கருத்திட்டங்களின் மூலம் சுத்திகரிக்கப்படாது விநியோகிக்கப்படுகின்ற நீரை மீண்டும் சுத்திகரிக்க வேண்டி நேரிட்டுள்ள பிரச்சினை.

நான்கு தசாப்தத்திற்கு அதிக காலத்தினுள் பெரும்பாலான கருத்திட்டங்களில் சுத்திகரிக்கப்படாது நீர் வழங்கப்படுவதோடு கருத்திட்ட திட்டமிடலினுள் சுத்திகரிப்பு முறைமையொன்று உள்ளடங்காதுள்ளதன் காரணமாக மீண்டும் புதிதாக சுத்திகரிப்பு முறைமையொன்றை திட்டமிடுகின்றபோது மேலதிக செலவினத்தை ஏற்க நேரிடுதல்.

10. நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்ட போதிலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் வளங்களை பயன்படுத்தல்.

நாட்டினுள் உருவாகிய எரிபோருள் நெருக்கடியினால் போக்குவரத்துச் செலவுகள் அதிகரித்தமையால் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் பின்னடைவு ஏற்பட்டமை

……..

கணக்கீட்டு உத்தியோகத்தர்

……..

பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர்

03 வது அத்தியாயம்

2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான முழுமொத்த நிதியியல் செயலாற்றுகை

3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று

ஏசீஏ- எப்

2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

பாதீட்டு 2022		குறிப்பு	உண்மை நிலை		
			2022	2021	
-	**வருமானப் பெறுகைகள்**		-	-	
-	வருமான வரி	**1**	-	-	**ஏசீஏ-1**
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	**2**	-	-	
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	**3**	-	-	
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	**4**	-	-	
-	**மொத்த வருமானப் பெறுகைகள் (அ)**		-	-	
-	**வருமானமற்ற பெறுகைகள்**		-	-	
768,721,050	திறைசேரி பணிமுற்பணங்கள்		1,166,922,552	1,495,466,500	**ஏசீஏ-3**
1,000,000,000	வைப்புகள்		71,000,227	112,042,156	**ஏசீஏ-4**
11,000,000	முற்பணக் கணக்குகள்		8,683,372	6,058,879	**ஏசீஏ-5**
-	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		39,423,220	12,301,273	
1,779,721,050	**மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)**		1,286,029,371	1,625,868,809	
1,779,721,050	**மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ ஸ்ரீ (அ)(ஆ)**		**1,286,029,371**	1,625,868,809	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)				
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ ஸ்ரீ (இ)-(ஈ)				

-	**கழி : செலவினம்** **மீண்டுவரும் செலவினம்**		-	-	
249,000,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	**5**	239,207,900	197,391,587	
82,170,000	ஏனைய பொருட்கள் சேவைகள்	**6**	71,907,256	43,510,299	**ஏசீஏ-2(னை)**
700,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	**7**	614,735	557,536	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	**8**	-	-	
60,000	ஏனைய மீண்டுவரும் செலவினம்	**9**	-	-	
331,930,000	**மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)**		**311,729,891**	241,459,422	
	மூலதனம் செலவினம்				
4,950,000	முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	**10**	1,793,978	3,158,584	
400,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	**11**	300,000	1,680,230	
-	மூலதன மாற்றல்கள்	**12**	-	-	**ஏசீஏ-2(னை)**
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	**13**	-	-	
200,000	திறன் விருத்தி	**14**	199,000	66,642	
603,696,000	ஏனைய மூலதனச் செலவினங்கள்	**15**	473,150,838	970,554,478	
609,246,000	**மொத்த மூலதனம் செலவினம் (எ)**		475,443,816	975,459,934	
	வைப்புக் கொடுப்பனவுகள்		**80,428,491**	52,995,801	**ஏசீஏ-4**
	முற்பணக் கொடுப்பனவுகள்		**13,203,432**	9,552,235	**ஏசீஏ-5**
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-	-	
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		93,631,923	62,548,036	
941,176,000	**மொத்த செலவினம் ஐ ஸ்ரீ (ஊஎஏ)**		880,805,630	1,279,467,392	
	டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ ஸ்ரீ (உ-ஐ)		405,223,741	346,401,417	
	பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி		405,223,741	346,401,417	**ஏசீஏ-7**
-	**டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி**		-	-	**ஏசீஏ-3**

2022 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை	
		2022	2021
		ரூபா	ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			-
			-
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	122,200,655	73,560,677
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5.5ஏ	23,420,047	18,899,987
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
மொத்த சொத்துக்கள்		**145,620,702**	**92,460,664**
தேறிய சொத்துக்கள் ∴ உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		(205,575,027)	(219,523,351)
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		122,200,655	73,560,677
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ		
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	228,995,074	238,423,338
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		**145,620,702**	**92,460,664**

பக்க இலக்கம் 1 முதல் 59 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்.'.பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 55 முதல் 62 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

.....	.....	.....
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்	கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான நிதி உத்தியோகத்தர்.'.பிரதான
பெயர்:	பெயர்:	பணிப்பாளர்(நிதி).'.ஆணையாளர்(நிதி)
பதவி :	பதவி :	பெயர் :
திகதி :	திகதி :	திகதி :

3.5 நிதிக் கூற்றுக்களின் குறிப்புகள்

3.5 நிதிக் கூற்றுக்களின் குறிப்புகள்

அறிக்கையிடலின் அடிப்படை

1) **அறிக்கையிடல் காலப்பகுதி**

இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2022 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.

2) **அளவீட்டுக்கான அடிப்படை**

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

3) **வருமானத்தை அடையாளங்காணுதல்**

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

4) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு**

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறமதிப்பீட்டு முறையில் அளவீடு 4 செய்யப்படுகின்றது.

5) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்**

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

6) **காசு மற்றும் காசுக்கு சமமானவை**

காசு மற்றும் காசுக்கு சமமானவை 2022 டிசம்பர் 31 இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

ழ ஒரு குறிப்பிட்ட அறிக்கையிடல் நிறுவனத்திற்கு குறிப்பிட்ட பரிவர்த்தனைகள் இருக்கும் சந்தர்ப்பங்களில் பொருத்தமான தகவல்களை அரச கணக்குகள் திணைக்களத்தின் அனுமதியுடன் உள்ளடக்கலாம் . அந்த குறிப்பிட்ட பரிவர்த்தனைகளுக்கு தேவையான வெளிப்படுத்தல் ‘‘அறிக்கையிடலின் அடிப்படை’’ என்பதற்குக் கீழ் சேர்க்கப்படலாம்.

ழ அறிக்கையிடல் நிறுவனத்திற்கு தொடர்புடைய கணக்கியல் கொள்கைகள் மட்டுமே ”அறிக்கையிடலின் அடிப்படை” இன் கீழ் வெளிப்படுத் தப்படவேண்டும்.

3.6 வருமான சேகரிப்புச் செயலாற்றுகை – ஏற்புடையதல்ல

ரூ. ,000

வருமானக் குறியீடு	வருமானக் குறியீட்டின் விபரம்	வருமான மதிப்பீடு		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		ஆரம்ப மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை (ரூ.)	இறுதி வருமான மதிப்பீட்டின் % ஆக

3.7 ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தல் பற்றிய செயலாற்றுகை

நிதி ஏற்பாட்டின் வகை	ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு		உண்மைச் செலவு	பயன்படுத்தப்பட்ட நிதி ஏற்பாடு, முடிவுறுத்தப்பட்ட இறுதி நிதி ஏற்பாட்டுத் தொகையின் % ஆக
	ஆரம்ப நிதி ஏற்பாடு	இறுதி நிதி ஏற்பாடு		
மீண்டுவரும்	273,385.00	331,930.00	311,729.89	93.91
மூலதன	1,207,250.00	609,246.00	475,443.82	**78.04

** உண்மைச் செலவு குறைந்த பெறுமதியைக் கொண்டுள்ளது கைவசமுள்ள கட்டணப் பட்டியல்களின் பெறுமதியான ரூபா 42.44 மில்லியனுக்கான கட்டுநிதித் தொகை கிடைக்காமையின் காரணத்தினால் கொடுப்பனவைச் செய்ய முடியாமற் போனமையின் காரணத்தினாலாகும். அந்தத் தொகையை ஆண்டினுள் செலுத்த முடியுமாயிருந்திருப்பின் உண்மைச் செலவு ரூபா 517.884 மில்லியனாகும் என்பதோடு, இறுதி நிதி ஏற்பாட்டின் சதவீதப் பெறுமதியும் 85 % வரை அதிகரித்திருக்கும்.

3.8 நி.ஒ. 208 இன் பிரகாரம் வேறு அமைச்சு/ திணைக்களங்களின் பிரதிநிதியாக இத்திணைக்களத்திற்கு அளிப்புச் செய்யப்பட்ட நிதி ஏற்பாடு

ரூ. ,000

தொடர் இல.	நிதி ஏற்பாடு பெறப்பட்ட அமைச்சு/ திணைக்களம்	நிதி ஏற்பாட்டின் நோக்கம்	நிதி ஏற்பாடு		உண்மைச் செலவு	பயன்படுத்தப்பட்ட நிதி ஏற்பாடு, வழங்கப்பட்ட இறுதி நிதி ஏற்பாட்டின் % ஆக
			ஆரம்ப நிதி ஏற்பாடு	இறுதி நிதி ஏற்பாடு		
1	நீர் வழங்கல் அமைச்சு	இருப்பிலுள்ள நீர் வழங்கல் கருத்திட்டங்களின் புனரமைப்பு, சிறுநீரக நோய் நிவாரணம், நீரேந்து பிரதேச பாதுகாப்பு, மழை நீர் தாங்கிகளை நிர்மாணித்தல், உடல்நலம் பேணல் வசதிகள்	371,577,14		339,217,54	91.29
2	நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு	வடக்கு கிழக்கு மாகாணங்கள் மீள் குடியமர்த்துகை நடவக்கைகளை துரிதப்படுத்தல் (நெனோ சுத்திகரிப்பு முறைமைகளை வழங்கல்)	27,950.00		27,950.00	100
3	அரசாங்க சேவைகள்இ மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு-	பட்டதாரி பயிலுனர் கொடுப்பனவுகளை செலுத்தல்	42,211.87		38,997,38	92.38

3.9 நிதி அல்லாத சொத்துக்கள் பற்றிய அறிக்கையிடல் செயலாற்றுகை – ஏற்புடையதல்ல

ரூ. ,000

சொத்துக் குறியீடு	குறியீட்டு விபரம்	31.12.2022 திகதிக்கு பண்டங்கள் கணிப்பீட்டு அறிக்கையின் படி மீதி	31.12.2022 திகதிக்கு நிதி நிலைமை அறிக்கையின் படி மீதி	எதிர்வரும் காலத்தில் கணக்கீட்டுக்கு உத்தேச மானவை	முன்னேற்றம் % ஆக அறிக்கை யிடல்
9151	கட்டடங்கள் மற்றும் கட்டமைப்புகள்				
9152	இயந்திர உபகரணங்கள்				
9153	காணி				
9154	கட்புலனாகாச் சொத்துகள்				
9155	உயிரியல் சொத்துக்கள்				
9160	நடைபெறுகின்ற வேலைகள்				
9180	குத்தகைக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்				

3.10 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு இல. 1)

04 வது அத்தியாயம்

செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)

விசேட சுட்டிகள்	எதிர்பாக்கப்படும் வெளியீட்டின் சதவீதம் (%) ஆக உண்மை வெளியீடு		
	100%- 90%	**75%-89%**	**50%- 74%**
214 புதிய நீர் கருத்திட்டங்களை நிர்மாணித்தல்		75%	
இருப்பிலுள்ள 87 நீர் கருத்திட்டங்களின் புனரமைப்பு	90%		
சிறு நீரக நோய் நிவாரணத்திற்காக நெனோ சுத்திகரிப்பு முறைமைகள் 30 தாபிக்கப்படுதல்		85%	
928 குறைந்த வருமானம் பெறுவோருக்காக உடல்நலம் பேணத்தக்க மலசல கூடங்களை நிர்மாணித்தல்		85%	
சமுதாய நீர் கருத்திட்டங்களு க்கான நீர் பாதுகாப்புத் திட்டம் மற்றும் நிலக்கீழ் நீர் மீள்செறிவூட்டலுக்கான கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.		85%	

05 வது அத்தியாயம்

நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை (SDG) நிறைவேற்றிக் கொள்வதன் செயலாற்றுகை

5.1 அடையாளங்காணப்பட்ட குறித்த நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை குறிப்பிடுக.

இலக்கு/ குறிக்கோள்	இலக்கு	சாதனைச் சுட்டிகள்	இதுவரை பெறப்பட்ட சாதனைகளின் முன்னேற்றம்		
			0%-49%	50%-74%	75%- 100%
அனைவருக்கும் பாதுகாப்பான நீர் மற்றும் உடல்நலம்பேணல்	2030 ஆம் ஆண்டளவில் பாதுகாப்பாக முகாமைத்துவம் செய்யப்பட்ட நீர் வழங்கல்	சனத்தொகை உள்ளடக்கம் %			**91.3%**
	2030 ஆம் ஆண்டளவில் பாதுகாப்பாக முகாமைத்துவம் செய்யப்பட்ட குழாய் நீர் வழங்கலுக்கான அணுகுதல்	சனத்தொகை உள்ளடக்க %		**59.76%**	

5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றிக்கொள்ளல் பற்றிய சாதனைகள் மற்றும் சவால்களை சுருக்கமாக விபரிக்குக.

(1) உலக வங்கி, UNDP, யுனிசெப், ஐரோப்பா போன்ற சர்வதேச அமைப்புகள் மற்றும் நிறுவனங்களின் நிதி அனுசரணை மற்றும் தொழில்நுட்ப பங்களிப்பு தொடர்ச்சியாக கிடைத்தல்.

(2) திணைக்களத்தின் கடமைப் பொறுப்பு மற்றும் விடயப் பரப்பு விரிவடைந்துள்ளதன் அடிப்படையில் நீரினால் கடும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ள கஷ்டப் பிரதேசங்கள் மற்றும் அதி கஷ்டப் பிரதேசங்களான கிராமங்களுக்கு மாற்றுவழியிலான நீர் மூலாதரங்களின் ஊடாக பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்கு இயலுமாயுள்ளமை.

(3) மீண்டும் இளம் பட்டதாரிகள் பெரும் தொகையானோர் திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டதன் மூலம் நீண்ட காலமாக இந்த அபிவிருத்திப் போக்கை கிராமம் வரை எடுத்துச் செல்வதில் காணப்பட்ட தடைகள் நீங்கியமை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பொறியியலாளர் பணியாட்டொகுதியை நிறைவு செய்துகொள்வதற்கு இயலுமாயிருந்தமை ஆகிய விடயங்களை இலக்கை அடையும் பொருட்டு 2021 ஆம் ஆண்டினுள் பெறப்பட்ட விசேட சாதனைகளாக குறிப்பிடக் கூடியதாக உள்ளது.

இலங்கையில் உருவாகிய பொருளாதார நெருக்கடி மற்றும் உறுதியற்ற தன்மையையும் இத் துறையில் நாம் முகம் கொடுத்த பாரியதொரு சவாலாக குறிப்பிடலாம். இதனுள் நிதி ஏற்பாடுகள் வரையறுக்கப்பட்டமை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் 50மூ குறைக்கப்பட்டமை, நிர்மாணிப்புப் பொருட்களின் பற்றாக்குறை மற்றும் அதிகளவில் விலை அதிகரித்தமை, எரிபொருள் நெருக்கடி, கட்டுநிதி போதியளவில் கிடைக்காமை ஆகியன பிரதானமான தடைகளாகும்.

06வது அத்தியாயம்

மனித வளங்கள் தோற்றப்பாடு

06.1 ஆளணி முகாமைத்துவம்

	அங்கீகரிக்கப்பட்ட ஆளணி	இருப்பிலுள்ள ஆளணி	வெற்றிடம் / (மிகை)
சிரேஷ்ட	36	22	14
மூன்றாம் நிலை	05	00	05
இரண்டாம் நிலை	400	407	(07)
ஆரம்ப நிலை	70	37	33

* 2022.12.31 ஆம் திகதியளவில் 01 பதவிநிலை உத்தியோகத்தர் உள்நாட்டு சம்பளமற்ற லீவுக்கு விண்ணப்பித்திருந்ததோடு, 02 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் 02 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு சம்பளமற்ற லீவுக்கு விண்ணப்பிருந்தனர்.

06.2 **நிறுவனத்தின் செயலாற்றுகையை முன்னிட்டு மனித வள பற்றாக்குறை அல்லது மிகை தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது எவ்வாறு என்பதை சுருக்கமாக விபரிக்குக.

நிறுவனத்தின் செயலாற்றுகையை முன்னிட்டு மனித வள பற்றாக்குறை கடும் தாக்கத்தை ஏற்பத்துகின்றது. 2022.12.31 ஆம் திகதியளவில் இத்திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி 511 ஆகுமென்பதுடன், பல்வேறான தரங்களின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள 18 பதவிப் பெயர்களுக்கு 117 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ள "தொழில்நுட்ப உத்தியோகத்தர்" பதவிகள் 40 வெற்றிடமாக காணப்படுவதன் காரணமாக அதற்கு ஒப்பந்த அடிப்படையில் 21 உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டு 25 மாவட்ட அலுவலகங்களின் கடமைகள் முகாமைத்துவம் செய்யப்படுவதோடு, ஒருங்கிணைந்த சாரதிகள் சேவையில் 26 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ள போதிலும் 2022.12.31 ஆம் திகதியளவில் சேவையில் ஈடுபட்டுள்ள சாரதிகள் 13 மட்டுமேயாகும்.

மேற்படி மனிதவளப் பற்றாக்குறை திணைக்களத்தின் அன்றாட நடவடிக்கைகளை வினைத்திறன்மிக்க வகையிலும் பயனுறுதியாகவும் பேணிவரப்படுவதற்கு பெரும் தடையாக உள்ளது. சிரேஷ்ட மட்டத்திலிருந்து ஆரம்ப மட்டம் வரை காணப்படுகின்ற மனிதவளப் பற்றாக்குறையை உயர்ந்தளவில் முகாமைத்துவம் செய்து திணைக்களத்தின் வினைத்திறனை உச்ச மட்டத்தில் பேணிவருவதற்கு நடவடிக்கை எடுக்கும் சவாலுக்கு அனைத்து உத்தியோகத்தர்களும் தமது பங்களிப்பை வழங்குகின்றனர்.

திணைக்களத்தின் விடயப்பரப்பு மற்றும் கடமைப் பொறுப்பினுள் பல அபிவிருத்திக் கருத்திட்டங்கள் முழு நாட்டையும் தழுவியவாறு நடைபெறுகின்ற சந்தர்ப்பத்தில் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை குறிப்பாக, கருத்திட்டங்களை மதிப்பீடு செய்தல், கண்காணிப்பு மற்றும் மேற்பார்வையில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

07வது அத்தியாயம்

இணங்கியொழுகுதல் பற்றிய அறிக்கை

07.1 இணங்கியொழுதல் பற்றிய அறிக்கை

இல.	ஏற்புடையதாக்கப்பட வேண்டிய தேவைப்பாடு	இணங்கியொழுகுதல் நிலைமை (இணங்கியொழுகியுள்ளது/ இணங்கியொழுகவில்லை)	இணங்கியொழுகவில்லை எனில் அதற்கான சுருக்கமான விளக்கம்	இணங்கியொழுகாமையை எதிர்காலத்தில் தவிர்ப்பதற்கு முன்மொழிகின்ற சரியான தீர்வு நடவடிக்கை
1	**கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிதிக் கூற்றுகள்/ கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டன.**			
1.1	வருடாந்த நிதிக் கூற்று	இணங்கியொழுகியுள்ளது		
1.2	அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு	இணங்கியொழுகியுள்ளது		
1.3	வியாபார மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்கு (வர்த்தக முற்பணக் கணக்கு)	ஏற்புடையதல்ல		
1.4	பண்டகசாலை முற்பணக் கணக்கு	ஏற்புடையதல்ல		
1.5	விசேட முற்பணக் கணக்கு	ஏற்புடையதல்ல		
1.6	ஏனையவை	ஏற்புடையதல்ல		
2	**புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பராமரித்தல் (நி.ஒ.445)**			
2.1	அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 267/2018 இன் படி நிலையான சொத்துக்கள் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல்	இணங்கியொழுகியுள்ளது		
2.2	ஆட்களுக்கான வேதனாதிகள் பதிவேட்டை/ ஆட்களுக்கான வேதனாதிகள் அட்டைகளை இற்றைப்படுத்தி பேணிவருதல்	இணங்கியொழுகியுள்ளது		
2.3	கணக்காய்வு விசாரணைகள் பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல்	இணங்கியொழுகியுள்ளது		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கை பதிவேட்டை இற்றைப்படுத்தி பேணிவருதல்	ஏற்புடையதல்ல		
